[2013 ஏப்ரல் 16

236—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***6384—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை பகுதியில் 1,004 போக்குவரத்து வாகனங்களும், 30,258 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் என மிகக் குறைந்த எண்ணிக்கையிலான வாகனங்களே உள்ளன. வரும் ஆண்டுகளில் வாகன எண்ணிக்கையின் உயர்விற்கு ஏற்ப மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவு பெற்று பகுதி அலுவலகம் துவக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.*

திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்பதுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடைக்கோடியில் உள்ளது ஊத்தங்கரை தொகுதி. ஊத்தங்கரையிலிருந்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் செல்ல வேண்டுமென்றால் 56 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. அங்கே வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்தமைக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*